தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை (NLQ) என்றால் என்ன?

- தேசிய மொழித் தகைமை (NLQ)மதிப்பீட்டுப் பரீட்சையானது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அரச சேவையின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களைப் போன்று, மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதன் பேரில் ஆர்வம் காட்டும் ஏனைய தரப்பினர்களினதும் மொழித் தேர்ச்சியை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட, தேசிய மட்டத்தில் அங்கீகாரமுடைய பரீட்சையாகும்.

- ஆதலால் இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி மொழியின் சகல துறைகளும் உள்ளடங்குமாறு பரந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- மொழித் தேர்ச்சி மதிப்பீட்டு வழிமுறைகளின் படி செவிமடுத்தல், வாசிப்பு, எழுத்து மற்றும் பேச்சு ஆகிய 4 கூறுகளும் மதிப்பிடப்படும். ஒவ்வொரு கூறுகளையும் பரீட்சிப்பதற்காக வினாத்தாள்கள் வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டு, 4 பரீட்சைகள் நடைபெறும். பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ் ஒவ்வொரு பரீட்சையிலும் வெவ்வேறாக 40% ஐ குறைந்தபட்ச புள்ளியாகப் பெறுதல் வேண்டும். இந் நான்கு பரீட்சைகளிலும் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் சராசரிக்கமைவாக தரவரிசைப்படுத்தப்படுவதோடு, ஏதேனும் ஒரு பரீட்சையில் அப் புள்ளி மட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட மாட்டாது.

- பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் வீச்சு பின்வருமாறு தரவரிசைப்படுத்தப்படும்.

| புள்ளிகளின் வீச்சு | தரம் |
|---|---|
| 100 – 80 | A |
| 79 – 65 | B |
| 64 – 50 | C |
| 49 – 40 | S |
| 39 - 0 | F |

- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் 05:01:02 ஆம் பந்தியின் பிரகாரம் அரச சேவையிலுள்ள எவரேனுமொரு அரச அலுவலர் தன்னார்வமாக மற்றைய அரசகரும மொழியைக் கற்பதற்கும், அதன் மூலம் கடமையாற்றுவதற்கும் ஆர்வம் காட்டுபவராயின், அவ்வாறான அலுவலர்களின் அறிவை மதிப்பிடுவதற்கும்,

ஊக்கப்படுத்துவதற்குமாக இத் தேசிய மொழித் தகைமை (NLQ) மதிப்பீட்டுப் பரீட்சையின் புள்ளி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தடவை மட்டும் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியமற்ற சம்பளவேற்றம் ஆகியவை பின்வருமாறு செலுத்தப்படும். இதன் போது தரம் C அல்லது அதனிலும் மேற்பட்ட தகைமைகளைப் பெறுவோருக்கு மட்டுமே இக் கொடுப்பனவு உரித்தானதாகும்.

| புள்ளிகளின் வீச்சு | தரம் | ஒரு தடவை மட்டும் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படாது மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு |
|---|---|---|---|
| 80 – 100 | A | ரூ. 25,000.00 | சம்பளவேற்றத்திற்குச் சமனானக் கொடுப்பனவு |
| 65 – 79 | B | ரூ. 20,000.00 | சம்பளவேற்றத்திற்குச் சமனானக் கொடுப்பனவு |
| 50 - 64 | C | ரூ. 15,000.00 | சம்பளவேற்றத்திற்குச் சமனானக் கொடுப்பனவு |

- ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் கொடுப்பனவைப் பெற வேண்டுமாயின் 05 வருடங்களுக்கு ஒரு தடவை இப் பரீட்சைக்குத் தோற்றி 50 புள்ளிகளுக்கு மேலதிகமாகப் பெறுதல் கட்டாயமானதாகும்.

- உத்தியோகத்தர் ஒருவர் எந்தவொரு பரீட்சையிலும் அதற்கு முந்தைய பரீட்சையில் பெற்றுக் கொண்ட மட்டத்தை விட உயர் புள்ளி மட்டத்தைப் பெற்றுக் கொள்வாராயின், அவ் உத்தியோகத்தருக்கு அவர் ஆரம்பத்தில் பெற்றுக் கொண்ட கொடுப்பனவிற்கும் உயர் புள்ளி மட்டத்திற்கான கொடுப்பனவிற்கும் இடையிலான வித்தியாசமே செலுத்தல் வேண்டும் என்பதோடு, உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது சேவைக் காலத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய உயர்ந்தபட்ச தொகை ரூ. 25000.00 ஆகும்.

- உத்தியோகத்தர் ஒருவர் பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் முன்னர் பெற்றுக் கொண்ட புள்ளி மட்டத்தை விடக் குறைவானப் புள்ளி மட்டத்தைப் பெற்றுக் கொள்வாராயின், ஆரம்பத்தில் பெற்றுக் கொண்ட கொடுப்பனவு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீள அறவிடப்பட மாட்டாது.

- மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள 2007.02.09 ஆந் திகதிய மற்றும் 03 / 2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையானது, அதன் ஏற்பாடுகளுக்கமைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெறும் உத்தியோகத்தர்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படும்.